[26th December 1956

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI: ஏற்கனவே conference போட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI G. GOVINDAN: கனம் அங்கத்தினர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சபைக்குள் குடையைக் கொண்டுவருகிறார். அப்படிக் கொண்டு வரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member should leave his umbrella outside.

Second-class Language Test

* 424 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there are any munshis, pandits, tutors, appointed by the Government to teach Government servants, any one of the languages prescribed for passing the second-class language test other than Tamil; and

9.40 a.m. (*b*) if not, what facilities are afforded by the Government to enable Government servants to learn and pass a Language Test?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The answer is in the negative.

(*b*) No facilities are afforded by Government; the need for such facilities has not so far arisen.

SRI P. RANGASWAMI REDDIAR: சர்க்கார் உத்தரவு நெம்பர் எம். எஸ். 3298, ஹோம், 10-ந் தேதி நவம்பர் 1954 பிரகாரம் நம்முடைய நாட்டில் டெப்யூடி கலெக்டர், ஜில்லா முன்சீப், சப் மாஜிஸ்டிரேட் முதலான உத்தியோகஸ்தர்கள் கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் தமிழை கட்டாயமாகவும், மற்ற மொழிகளில் ஒன்றை அவசியம் படித்து second class language test பாஸ் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறது. 1956ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதிக்குப் பிறகும் இது அமுலில் இருக்கவேண்டிய அவசியமென்ன? அவர்கள் உண்மையாகவே அந்த மொழிகளில் பயிற்சி பெற்று பாஸ் செய்வதற்கு சர்க்கார் வசதி செய்து கொடுக்காமல் அவர்கள் எப்படி பாஸ் செய்வார்கள்? இல்லாவிட்டால் அவர்கள் போலியாகத்தான் பாஸ் செய்ததாகத் தெரியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இது பல ஆண்டுகளாக அமுலில் இருந்துகொண்டு வருகிறது. இது வரையில் இதுபற்றி யாருக்கும் கஷ்டம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதிக்குப் பிற்பாடு இரண்டாவது மொழி ஒன்றில் தேரவேண்டுமென்கின்ற விதி அவசியமா, இல்லையா, அவசியமென்றால் எந்த மொழி பற்றி அவசியமாக இருக்க வேண்டுமென்பதைப்பற்றி யெல்லாம் இப்போழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது,

Seed farms

* 425 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of seed farms started by the Government in 1956;